# கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
# ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், கடலூர் மாவட்டம்.

## அறிவிப்பு

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, திட்டக்குடி, பரங்கிப்பேட்டை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய நீதிமன்றங்களில் இயங்கும் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக சேவை புரிய கீழே குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட).
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்.
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
- அங்கன்வாடிப் பணியாளர்கள்.
- மருத்துவர்கள்/உடல் நல நிபுணர்கள்.
- மாணவர்கள் மற்றும் சட்டகல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவுசெய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப்பிரமுகர்கள்.
- மகளிர் குழுக்கள், மைத்ரிசங்கள் மற்றும் வறியோரை உள்ளடங்கிய சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்.
- மாவட்ட/வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

| | | |
|---|---|---|
| 1. | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் இரக்கம், ஏனையவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீதுஒன்றி இருத்தல், எவ்விதபணப் பயனும் எதிர் பார்க்காமல் தன்னார்வ சேவைபுரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமூகத்தின் பலவீனமானபிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |
| 2 | வயது | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| 3 | மதிப்பூதியம் | வேலை பணிபுரியும் முழு நாள் ஒன்றுக்கு ரூபாய் 750/ - மதிப்பூதியமாக வழங்கப்படும். |
| 4 | விண்ணப்பிக்க கடைசி நாள் | 05.11.2025 |

கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் 05 நபர்களும், விருத்தாச்சலம் வட்ட சட்டப்பணிகள் குழுவில் 01 நபரும், சிதம்பரம் வட்ட சட்டப்பணிகள் குழுவில் 02 நபர்களும், பண்ருட்டி வட்ட சட்டப்பணிகள் குழுவில் 04 நபர்களும், திட்டக்குடி வட்ட சட்டப்பணிகள் குழுவில் 02 நபர்களும், பரங்கிப்பேட்டை வட்ட சட்டப்பணிகள் குழுவில் 02 நபர்களும், மற்றும் குறிஞ்சிப்பாடி வட்ட சட்டப்பணிகள் குழுவில் 02 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விருப்பமுள்ளவர்கள் 05.11.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ள அலுவலக முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

| வ. எண் | அலுவலக பெயர் | விண்ணப்பிக்க வேண்டிய முகவரி |
|---|---|---|
| 1. | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, கடலூர் | தலைவர்,<br>மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, கடலூர் |

மேற்படி சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கான கடமை சேவை மட்டுமே உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் 09.11.2025 அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் இயங்கும் கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அலுவலகத்தில் நடைபெறும் நேர்காணலில் கலந்துகொள்ளவும்.

நேர்காணலில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பத்தில் இணைத்துள்ள சான்றுகளின் அசல் ஆவணங்களுடன் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக கலந்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பத்தினை கடலூர் மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**https://cuddalore.dcourts.gov.in**

24.10.25

தலைவர்/மாவட்ட முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
கடலூர்

D. No. 2234
24.10.2025

24/10/25

குறிப்பு:

- மாவட்டத்தில் எங்கும் பணிச் செய்ய விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- எப்பொழுது அழைத்தாலும் தனது கடமை, சேவை மட்டுமே என்பதும் உத்தியோகம் இல்லை என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.
- தனக்கு கொடுக்கப்படும் பணி தற்காலிகமானது என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.
- தனக்கு கொடுக்கப்படும் பணிக்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பது தெரிந்துக்கொள்ள வேண்டும்.
- சட்ட விழிப்புணர்வை பொது மக்களிடம் அவர்கள் இருக்கும் இடத்திற்கு கொண்டு சேர்க்கும் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும்.
- சேவை மனபான்மை உள்ளவராக இருக்க வேண்டும்.
- எழுத படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும்.